**Judicial Form No.53**

(See Rule 43)

**DEPOSITION OF WITNESS**

**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 288/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | பனியன் கம்பெனியில் வேலை |
| பெயர். | - | கலைமணி | வட்டம் | - | விழுப்புரம் |
| த/பெ. | | நாராயணன் | சமயம் | - | |
| கிராமம் | - | வழுதரெட்டி | வயது | - | 36 |

12.11.2025

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது வழுதரெட்டியில் வசித்து பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். எனது தம்பி கபிலன் என்பவருக்கு எடையார் கிராமத்தை சேர்ந்த ஜகதீஸ்வரி என்பவரை திருமணம் செய்வதற்காக சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு நிச்சயதார்த்தம் செய்திருந்தோம். திருமணத்திற்கு 2 நாட்களுக்கு முன்பு எதிரி ரவிந்தர் மது போதையில் தான் அந்த பெண்ணை விரும்புவதாகவும், எனது தம்பி திருமணம் செய்ய தகராறு செய்தார். அதனால் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். அப்போது போலீசார் விசாரணை செய்தார்கள்.

2. அப்போது ஜகதீஸ்வரி எனது தம்பி கபிலனை திருமணம் செய்ய போவதாகவும், எதிரி வேண்டுமென்றே பண்ணுவதாகவும் கூறினார். அப்போது எதிரி மது போதையில் அங்கிருந்த போலீசாரிடம் தகராறு செய்தார். பின்பு போலீசார் எனது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். அதில் நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன். தற்போது என்னிடம்

காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும்.**

3. பின்பு மறுநாள் காலை எதிரியை விசாரித்தார்கள். அப்போது எதிரி வாக்குமூலம் கொடுத்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் எதிரி கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்து அ.சா.ஆ.4 ஆகும்**. போலீசார் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எழுதப்படாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டேனா என்றால் எழுதியிருந்தது. அதில் என்ன எழுதியிருந்தது, படித்து காட்டினார்களா என்றால் சாட்சி முதலில் நியாபகம் இல்லை என்று சொல்லிவிட்டு பின்பு படித்தும் பார்க்கவில்லை, படித்தும் காட்டவில்லை என்று சொல்கிறார்.

2. காவல் நிலையத்தில் யார் கம்பளைண்ட் செய்தது என்றால் என் தம்பி கம்பளைண்ட் செய்தார். அப்போது நான் கூட போயிருந்தேன். அப்போது என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் நைட் வாங்கினார்களா , காலையில் வாங்கினார்களா என்று நியாபகம் இல்லை.

3. கையால் எழுதிய ஆவணத்தில் தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். வேறு எந்த ஆவணத்திலும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். நான் கையால் எழுதிய பேப்பரில் கையெழுத்து போட்ட ஆவணத்தில் நேரம் எதாவது குறிப்பிட்டிருந்ததா என்றால் தெரியவில்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.